# MUNICIPAL COUNCIL IN BATTICALOA

LIBRARY
16 AUG 2012
Eastern University, Sri Lanka.

NAME:- MR. SIVAGNANAM PIRAKARAN
REG. NO:- EU/IS/2006/AC/106
INDEX NO:- CS 2801

96

A DISSERTATION SUBMITTED TO THE FACULTY OF ARTS & CULTURE, EASTERN UNIVERSITY, SRI LANKA. AS A PARTIAL FULFILLMENT OF THE REQUIREMENT OF THE BACHELOR OF ARTS SPECIALIZED IN HISTORY.

FAC96
Project Report
Library - EUSL

DEPARTMENT OF HISTORY,
ARTS AND CULTURE,
EASTERN UNIVERSITY,
VANTHARUMULAI,
SRI LANKA.

2011.

PROCESSED
Main Library, EUSL

# முன்னுரை

இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பிலான மேற்பார்வையும், நிர்வாகமும் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் 13வது அரசியல் அமைப்பு திருத்தத்துடன் மாகாண சபைகளுக்கு கொடுக்கப்பட்டது. அவ்வாறான உள்ளூராட்சி மன்றங்களாக மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகியவை இலங்கையில் காணப்படுகின்றன. அந்த வகையில் கிழக்கு மாகாண சபைக்குரிய உள்ளூராட்சி மன்றுகளின் வரிசையில் மட்டக்களப்பு மாநகர சபையும் காணப்படுகின்றது. மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை, வகைப்பொறுப்பு, சமத்துவம், ஆகிய பண்புகளை இச்சபை கொண்டுள்ளது. இப்பண்புகளை வெளிக்கொணரும் ஒரு ஆய்வாக இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி கட்டமைப்பின் வரலாற்றுப் பின்னனி, மட்டக்களப்பு மாநகர சபையின் வளர்ச்சி, செயற்பாடுகள், அதிகாரங்கள், வரிவசூலிப்புக்கள், பொறுப்புகள், சேவைகள் போன்ற விபரங்களும், மாநகர சபை அதிகாரப் பிரதேசத்துக்குள் காணப்படும் சமூக கட்டமைப்பு, சமூகப்பிரிவுகள், அவற்றின் பண்புகள், வாழ்க்கை முறைமை, இனங்களின் தன்மைகள், சுகாதார வசதிகள், முறைசார்ந்த, முறைசாரா கல்வி நிலைமைகள் போன்ற விபரங்களும் இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளன.

முதலாவது அத்தியாயம் மாநகர சபைகள் எவ்வாறு உருவாக்கம் பெற்றுக் கொண்டது, இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி மன்றுகள், மாநகர சபையின் அமைப்பாண்மைக் கட்டமைப்பு,மட்டக்களப்பு மாநகர சபையின் வளர்ச்சி நிலைகள், போன்ற விபரங்களை ஆராய்கின்றது. இரண்டாவது அத்தியாயம் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆதிக்கப்பிரதேசம், வாழ்க்கை முறைகள், எவ்வகையான இனங்கள் காணப்படுக்கின்றன, அவற்றினுடைய பரம்பல், வளர்ச்சி நிலைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. மூன்றாவது அத்தியாயம் சமூகக் கட்டமைப்புக்கள், என்ன வகையான சாதிப்பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றினுடைய சட்டங்கள், தாய்வழிச் சமூதாய நிலைமை, பாரம்பரியமான கலைகள், இலக்கிய வளர்ச்சி, கலை நிகழ்வுகள், பொதுக்கட்டடங்கள், வாழ்வியற் கட்டடங்கள் போன்ற விபரங்களை கொண்டுள்ளது.

நான்காவது அத்தியாயம் ஆரம்பத்தில் எவ்வாறு கல்வி நிலை காணப்பட்டது. ஆரம்ப பாடசாலைகள், பிரதான பாடசாலைகள், அவற்றின் கல்வி நிலைமை, முறைசாரா கல்வி நிலைமை, மாநகர சபைக்கும் பாடசாலைக்குமுள்ள தொடர்புகள், என்பவற்றை விளக்கமாக கொடுக்கின்றது. ஐந்தாவது அத்தியாயம் மாநகர சபையின் ஊழியர்கள், அவர்களின் தகைமைகள், மாநகரசபையின் தொழிற்பாடுகள், துணைச்சட்டங்கள், அவற்றின் அதிகாரங்கள், மக்கள் மாநகர சபையின் மீது கொண்டுள்ள அதிகாரங்கள், மாநகர சபையின் வருமானம், அதனுடைய சேவைகள் என்பவற்றை விரிவாகக் கூறுகின்றது. ஆறாவது அத்தியாயம் போக்குவரத்து விதிகள், தனியார் - அரசாங்க

போக்குவரத்து சேவைகள், மாநகர சபையின் வேலைத்திட்டங்கள் போன்ற விடயங்களை கூறுகின்றது. ஏழாவது அத்தியாயம் சுகாதாரத்தைப் பேணுவது தொடர்பான விதிகள், திண்மக்கழிவு முகாமைத்துவச் செயற்திட்டங்கள், சுகாதார சேவை அலுவலகங்களுக்கும் மாநகர சபைக்குமான தொடர்புகள், என்பவற்றை ஆய்வு செய்கின்றது. இந்த வகையில் ''மட்டக்களப்பில் மாநகர சபை'' எனும் இவ்வாய்வினை பெரும்பாலும் மாநகரசபை தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள், ஆக்கங்கள், இணையத்தள தகவல்கள், மற்றும் நேர்காணல் போன்றவற்றின் அடிப்படையில் இவ்வாய்வனை நூல் வடிவில் அமைத்துள்ளேன்.

ஆய்வாளன்.

## பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| உறுதியுரை | I |
| நன்றியுரை | II |
| முன்னுரை | III |

### அத்தியாயம் - 01 (1 – 12)

| | |
|---|---|
| 1.0 இலங்கையில் உள்ளூராட்சி அமைப்புகளின் தோற்றம் | 1 |
| 1.1 இலங்கையில் மாநகர சபைகளின் தோற்றம். | 2 |
| 1.2 உள்ளூராட்சி மன்றுகளும், மாநகர சபையின். அமைப்பாண்மைக் கட்டமைப்பும். | 5 |
| 1.3 மட்டக்களப்பின் அமைவிடம். | 6 |
| 1.4 மட்டக்களப்பு மாநகர சபையின் வளர்ச்சி. | 8 |

### அத்தியாயம் - 02 (13 - 24)

| | |
|---|---|
| 2.0 நகரவாசிகள். | 13 |
| 2.1 மட்டக்களப்பு மாநகர சபையின் அதிகாரப்பிரதேசம். | 14 |
| 2.2 வாழ்க்கை முறை. | 15 |
| 2.3 இனங்களின் தன்மைகள். | 19 |
| 2.4 இனங்களின் பரம்பலும், வளர்ச்சியும். | 21 |

### அத்தியாயம் - 03 (25 - 42)

| | |
|---|---|
| 3.0 சமூக உறவுகள். | 25 |
| 3.1 சமூகக் கட்டமைப்பு. | 26 |
| 3.2 சாதிப் பிரிவுகள். | 28 |
| 3.3 உறவுகளின் தன்மைகள். | 31 |
| 3.4 சமூக , கலாசார , பண்பாட்டுத் தொடர்புகள். | 34 |

### அத்தியாயம் - 04 (43 - 50)

| | |
|---|---|
| 4.0 கல்வி வளர்ச்சி. | 43 |
| 4.1 ஆரம்ப நிலை. | 44 |
| 4.2 ஆரம்ப, பிரதான பாடசாலைகளில் சமகால கல்வி நிலை. | 44 |
| 4.3 மாநகர சபைக்கும், பாடசாலைக்கும் உள்ள தொடர்புகள். | 48 |
| 4.4 முறைசாரா கல்வி நிலை. | 49 |

## அத்தியாயம் - 05 (51 – 68)


5.0 நகராட்சி. 51

5.1 ஆளணிப் பொழிப்பு. 52

5.2 செயற்பாடு. 55

5.3 துணை விதிகளும், அதிகாரங்களும். 57

5.4 வரி வசூலிப்பும், சேவைகளும். 64


## அத்தியாயம் - 06 (69 - 81)


6.0 போக்குவரத்து வசதி. 69

6.1 போக்குவரத்து தொடர்பான நடைமுறைகள். 70

6.2 அரசாங்க – தனியார் போக்குவரத்து சேவைகள். 71

6.3 மாநகர சபைக்கும், அரசாங்க – தனியர் பேரூந்து சாலைக்கும் உள்ள தொடர்புகள். 75

6.4 போக்குவரத்து வசதி தொடர்பான வேலைத்திட்டங்கள். 75


## அத்தியாயம் - 07 (82 – 94)


7.0 சுகாதார வசதிகள். 82

7.1 சுகாதாரத்தைப் பேணுவது தொடர்பான நடைமுறைகள். 83

7.2 மட்டக்களப்பு மாநகர சபையின் சுகாதாரப் பகுதியால் மேற்கொள்ளப்படும் சேவைகள். 84

7.3 திண்மக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள். 85

7.4 மாநகர சபைக்கும், சுகாதார சேவை அலுவலகங்களுக்குமான தொடர்புகள். 88

7.5 தொகுப்புரை. 90

7.6 உசாத்துணை நூல்கள். 92

7.7 சஞ்சிகைகள். 93

7.8 இணையத்தளம். 94